நீதிமன்ற படிவ எண்.53
(விதி 42ஐ காண்க)
<u>சாட்சியின் சான்றுரை</u>
(கு.வி.மு.ச., அத்தியாயம் XXIII)
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

S.C.No. 108/2023

<u>அ.சா:3 (LW 4)சாட்சியின் சான்றுரை</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன். | சாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | மதம் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

19.11.2025 நாளன்று 1969ம் ஆண்டு உறுதிமொழிச் சட்டம் (மையச் சட்டம் 44/1969) இன் வகைமுறைகளுக்கு உட்பட்டு உளமாற உறுதியளிக்கப்படுகிறது.

---

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். சாட்சி காவல் துறையினரால் அடையாளம் காட்டப்பட்டு சாட்சினுடைய ஆதார் அடையாள அட்டையுடன் ஒப்பிடப்பட்டு சரிப்பார்க்கப்பட்டது.)

சாட்சி இன்று அழைக்கப்பட்டு திரு.S.சுரேஷ் கிரேடு 3 பெஞ்ச் கிளார்க் (மாற்றுப்பணி) அவர்களால் உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை:</u> தொடங்கப்பட்ட நேரம் 02.34 பி.ப

நான் ஸ்ரீரங்கபுரத்தில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். சம்பவ தினத்தன்று நான் ஊரில் இல்லை. எந்த சம்பவத்தையும் நான் நேரில் பார்க்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

SARAVANAKUMAR.G.N
Digitally signed by SARAVANAKUMAR.G.N
Date: 2025.11.19 18:10:35 +0530

<u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கோரப்பட்டு, நீதிமன்ற அனுமதியுடன் சாட்சியிடம் அரசு தரப்பிலான குறுக்கு விசாரணை</u>

கடந்த 27.08.2022ம் தேதி காலை 06.45 மணியளவில் நானும் எங்கள் ஊரை சார்ந்த நாராயணசாமி மகன் கண்ணன் அருவாளுடன் வந்து குமரனை பார்த்து அப்பன் வீட்டு சொததை எல்லாம் நீ வாங்கிவிட்டாய். நான் என் பிள்ளைகளுக்கு சொத்துகளுக்கு என்ன செய்யவது என்று தகாத வார்த்தையால் அசிங்கமாக திட்டி நீ செத்தால்தான் என் அப்பன் சொத்து கிடைக்கும் என்று எதிரி சந்திரன் கையில் வைத்திருந்த அருவாளால் குமாரின் தலையில் வெட்டியதால் அவருக்கு தலையில் இடது பக்கம் பின்புறம் இரத்த காயமும் இடது கை புஜம் இடது கை முழங்கைக்கு கீழ், இடது மோதிர விரலில் இரத்த காயமும், வலது கை மோதிர விரல் மற்றும் சுண்டு விரலில் வெட்டியதில் இரத்த காயமும் இடது கால் தொடையில் இரத்த காயம் ஏற்பட்டு கத்தினார் என்றால் எனக்கு தெரியாது. பின்னர் நானும் கண்ணணும் சத்தம் போட்டவுடன் எதிரி சந்திரன் ஓடிவிட்டார் என்றால் சரியல்ல. சொத்து பிரச்சனைக்காக தங்களுக்கும் எதிரிகளுக்கும் இடையே முன் விரோதம் காரணமாக மேற்கூரிய சம்பவம் நடந்தது என்று கூறினார். இதற்கு உடந்தையாகவும் துண்டுதாலகவும் எங்கள் ஊரை சேர்ந்த எதிரிகள் வேல்முருகன், ராதா (எ) ராதாகிருஷ்ணன் மற்றும் வீரபெருமாள் சொன்னார்கள் என்று கூறினார்கள் என்றால் எனக்கு தெரியாது. காயம்பட்ட குமரனை தேனி க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றார் என்றால் எனக்கு தெரியாது. விசாரணையின்போது விசாரணை அதிகாரியிடம் வாக்குமூலமாக தந்துவிட்டு தற்பொழுது எதிரிகளுக்கு பயந்து உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u> இல்லை.

விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 02.42 பி.ப

*Taken down by me/before me in open Court interpreted read over to the witness and admitted by the deponent to be correct.*

SARAVANAKUMAR.G.N Digitally signed by SARAVANAKUMAR.G.N Date: 2025.11.19 18:10:40 +0530

Chief Judicial Magistrate,
Theni
Date:19.11.2025